CFM/L/43 (43)

# நெருப்புக்காய்ச்சலில் இருந்து (Typhoid Fever) எம்மை பாதுகாப்போம்.

## நோய் பற்றி.....

* சல்மொனெல்லா ரை.ஃபி எனும் பற்றீரியாவால் ஏற்படுகிறது.

* இது எமது உடலில் தொற்றி 10-14 நாட்களில் நோய் அறிகுறிகளை வெளிக்காட்டும்

* இந்நோய், நோய்த்தொற்றுடைய நபரின் மலம், சலம் மூலமாக உணவு, நீர் என்பன மாசுபடுவதால் ஏற்படுகின்றது.

* வீட்டு ஈ நோய்த் தொற்றலுக்கு பெரிதும் உதவுகிறது.

## நோயின் அறிகுறிகள்.

- ✸ தொடர்ச்சியான காய்ச்சல் படிப்படியாக அதிகரித்தல். (102°F - 104°F / 40°C ற்கு மேல்)
- ✸ வாந்தி, பசியின்மை.
- ✸ தாகம், உடற்சோர்வு
- ✸ முதலில் மலச்சிக்கல் பின்னர் வயிற்றோட்டம் ஏற்படும்.
- ✸ மலம் கறுப்பு நிறமாக மாறும்.

காய்ச்சல் ஏற்பட்டு குணமடைந்த நோயாளிகளில் 5-10% ஆனவர்கள் தம் மலத்துடன் பற்றீரியாவை வெளியேற்றுகின்றனர். எனவே காய்ச்சல் மாறிவிட்டது என்ற அலட்சியம் வேண்டாம்.

- ✸ நோயாளியாக இருந்தவருக்கு குடலில் புண்கள் காணப்படும். ஆதலால் ஒரு மாதத்திற்கு காரமான உணவு வகைகள் கொடுப்பதைத் தவிர்க்கவும்.

## தடுக்கும் முறைகள்.

- ✸ கொதித்தாறிய நீரை அருந்துங்கள்.
- ✸ உணவை மூடி ஈக்களிலிருந்து பாதுகாத்து வையுங்கள்.
- ✸ பழங்கள், பச்சை இலை வகைகளை நன்கு கழுவிய பின்பே உண்ணுங்கள்.
- ✸ வெளியிடங்களில் திறந்து வைத்த உணவுகளை உண்ணாதீர்கள்.
- ✸ உணவுப் பொருட்களைச் சமைத்தவுடன் உண்ணுங்கள்.
- ✸ சமைக்க முன்பும், உணவு உட்கொள்ள முன்பும், மலகூடம் பாவித்த பின்பும் கைகளை சவக்காரமிட்டு நன்றாக கழுவுங்கள்.
- ✸ எப்போதும் மலசல கூடத்தில் மலம் கழியுங்கள்.
- ✸ சிறிய பிள்ளையினது மலமும் மல கூடங்களில் இடப்படவேண்டும்.
- ✸ திண்மக் கழிவுகளைச் சேகரித்து உரிய முறையில் அழிப்பதன் மூலம் இலையான் பெருக்கத்தை தடுக்கலாம்.
- ✸ கிணற்றுக்கு சரியான முறையில் குளோரின் இடுங்கள்.
- ✸ நெருப்புக் காய்ச்சலுக்கான அறிகுறிகள் இருப்பின் வைத்தியரின் உதவியை நாடுங்கள்.


கொதித்தாறிய
நீர்

நெருப்புக் காய்ச்சல் நோயாளி ஒருவர் வீட்டில் இருந்தால் நீங்கள் செய்ய வேண்டியவை.

- நோயாளி தனிமைப்படுத்தப்பட வேண்டும்.
- தேவையான வைத்திய சிகிச்சை பெறல் வேண்டும்.
- நோயாளியை, வைத்தியரால் கொடுக்கப்பட்ட மருந்துகளை வைத்தியர் குறிப்பிட்ட நாட்களுக்கு பாவிக்கவைத்தல். (காய்ச்சல் நின்றாலும் தொடர்ச்சியாக குளிசை பாவித்தல் வேண்டும்)
- நீராகாரம் அதிகளவு கொடுக்கப்பட வேண்டும். ஏனைய உணவுப் பதார்த்தங்களை வைத்திய ஆலோசனையின்படி கொடுக்கலாம்.
- பராமரிப்பவர் ஒருவராக இருப்பதுடன் அவர் நோயாளியுடன் தொடர்பை ஏற்படுத்தும் ஒவ்வொரு முறையின் பின்பும் கைகளை சவர்காரமிட்டு நன்கு கழுவவேண்டும்.
- நோயாளியின் மலம், சலம் மலசல கூடத்தில் கழிக்கப்படல் வேண்டும், அல்லது நெருப்புத் தண்ணீர் (Pynol,Lysol) கொண்டு தொற்று நீக்கப்பட்டு, புதைக்கப்பட வேண்டும்.
- நோயாளியின் உடைகள், படுக்கை விரிப்புக்கள், துவாய் என்பன சுடுநீரில் அல்லது டெற்றோல் கலந்த நீரில் சுத்தம் செய்யப்படல் வேண்டும்.

* அனைவரும் மலகூடம் பாவிப்பது நெருப்புக் காய்ச்சல் போன்ற குடலுடன் சம்மந்தப்பட்ட நோய்களை நிரந்தரமாகத் தடுப்பதற்கு ஒரே சிறந்த வழி.

* சந்தேகிக்கப்படும் நோயாளிகள் உடனடியாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்படல் வேண்டும்.

* வைத்தியரின் ஆலோசனையின்றி மருந்து பாவிக்கவேண்டாம்.

* முறையற்ற நுண்ணுயிர்க் கொல்லி மருந்தை (Antibiotics) பாவிப்பதாலும் வைத்தியசாலையில் அனுமதிக்க முன் தாமாக நுண்ணுயிர்க்கொல்லி மருந்தை பாவிப்பதாலும் நோய்க்கிருமியை பரிசோதனையில் கண்டுபிடித்தலில் இடையூறினை ஏற்படுத்தும்.

## வந்தபின் தவிப்பதை விட

## வருமுன் காப்போம்

வெளியீடு:
சமுதாய மருத்துவத்துறை
யாழ் பல்கலைக்கழகம்
ஏப்ரல் 2007.

தயாரிப்பு உதவி:
B.பிரதாபன்
மருத்துவபீட மாணவன்
(2002/FM/40)
(4ம் வருடம்)

ஸேவாலங்கா
சேவாலங்கா
SEWALANKA

அனுசரணை:
சேவாலங்கா மன்றம்
யாழ்ப்பாணம்.